[2002 மே 3

வினா எண் 287, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

287—

அருந்ததியர் காலனியில் வீடுகள்

***14530— திரு. என்.கே. பெருமாள்:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைமாற்று வாரியத் திட்டத்தின்கீழ் விளாத்திகுளம் அருந்ததியர் காலனியில் வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. என்.கே. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற இலக்கை அடைந்திடவும் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமையை நிலைநாட்டி, அவர்தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும் அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எனது விளாத்திகுளம் தொகுதியிலே விவசாயிகளினுடைய நலன் கருதி குளிரூட்டி பதப்படுத்தும் நிலையம் ஒன்றும், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்கு திருப்பணித் தேவைக்கு 10 இலட்சம் ரூபாய் வழங்கி...

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெருமாள், அருந்ததியர் காலனி வீடுகள், அதை மட்டும் கேளுங்கள்.

2002 மே 3]

திரு. என்.கே. பெருமாள்: விளாத்திகுளத்தில், பனையடிப்பட்டியில் அரசுக்குச் சொந்தமான நிலம் உள்ளது. இந்த நிலத்திற்கு அருந்ததியர் சமுதாய மக்களுக்கு. பட்டா வழங்கி, இவர்கள் வாழ்வில் ஒளியேற்றிட வேண்டும். 'வாம்பே' திட்டத்தில்—அருந்ததியர் மக்கள், விளாத்திகுளத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த மக்களுக்கு, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியுடன், வீடுகள் கட்டித் தரப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் பேரூராட்சிப் பகுதியில், அருந்ததியர் காலனியில் சுமார் 85 குடும்பங்கள் குடிசைப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இக்குடும்பங்களுக்குத் தற்போது மைய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள 50 சதவீதம் மானிய உதவியுடன், 'வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா (வாம்பே) வீட்டுவசதித் திட்டத்தின்' கீழ் பயனாளிகள் 10 சதவீதம் மதிப்பீட்டுத் தொகையை முன்பணமாகவும், 40 சதவீதம் பணத்தை ஹட்கோ கடன் உதவியுடனும், 15 வருட காலத்தில் குறைந்த வட்டியுடன் திரும்பச் செலுத்த சம்மதம் தெரிவித்தால், குடும்பம் ஒன்றுக்கு, ஒரு வீட்டிற்கு 40,000 ரூபாய் வீதம் இக்குடும்பங்களுக்கு தனி வீடுகள் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினருக்கு அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 288, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

288—

பொருட்காட்சி

***21514—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—